## திருத்தங்கல் நகராட்சி
## மன்றகூட்டப்பொருள்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2045 ஹேவிளம்பி வருடம் மாசி திங்கள் 16 நாள் **28–02–2018** ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரணகூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.எஸ். முகம்மது சாகுல் ஹமீது, எம்.இ.,**

திருத்தங்கல் நகராட்சி
நாள் . 23–02–2018

**ஆணையாளர்/ தனிஅலுவலர்**
**திருத்தங்கல் நகராட்சி**

**பொருள் எண்: 16**

திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு இடங்களில் உள்ள கருவேல் மற்றும் சீமைக்கருவேல் மரங்களைவ ழக்கு எண் WP (MD) No. 16485/2015 நாள்.10.01.2017-ன் தீர்ப்பின் படி அகற்றி அவ்வப்போது நீதி மன்றத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் நகராட்சி மண்டல இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலியிலும் போட்டோ எடுத்து ஆல்பம் தயாரித்து சமர்பிக்கப்பட்டது. போட்டோ மற்றும் ஆல்பம் திருத்தங்கல் சங்கர் ஸ்டுடியோ & வீடியோ மூலம் தயாரித்து கொடுதமைக்கு கட்டண தொகையாக ரூ.6050/- (ரூபாய் ஆறு ஆயிரத்து ஐம்பது) மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3388/2016/எப்1

**பொருள் எண்: 17**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதித்திட்டம் 2017-2018-ம் ஆண்டு இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று கீழ்கண்ட பணிக்கு 30.01.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** பெரியகுளம் கண்மாயில் திண்டு அமைத்து பேனல் போர்டு மாற்றி அமைக்கும் பணி மற்றும் புதிய பேனல் போர்டுகள் G.I Pipe, வயர் கேபிள்கள் மற்றும் குடிநீர் உபரிப் பொருட்கள் சப்ளை செய்யும் பணி | 7.00 | திரு. எம்.ஐயப்பன் மதுரை | **0.51%** கூடுதல் |
| | | | திரு.எம்.கண்ணன் மதுரை | 0.42% குறைவு |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.42% குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.கண்ணன் மதுரை அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் : 2000/2017/இ1)

**பொருள் எண்:18**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதித்திட்டம் 2017-2018-ம் ஆண்டு இந்நகர்மன்ற தீர்மான எண்.4 நாள்.31.01.2018 அனுமதி பெறப்பட்டு கீழ்கண்ட பணிக்கு 08.02.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** வார்டு எண் 01 முதல் 10 வரை உள்ள குடிநீர் குழாய்களை பழுது நீக்கம். ( கூலி ஒப்பந்தம் மட்டும் பொருட்கள் உள்பட ) செய்யும் பணி | 10.00 | திருமதி.ராதா | **0.34%** குறைவு |
| | | | திரு.லிங்கதுரை | 0.27% குறைவு |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.34% குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திருமதி.ராதா அவர்களின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு—**

அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் : 25/2018/இ1)

**பொருள் எண்:19**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதித்திட்டம் 2017-2018-ம் ஆண்டு இந்நகர்மன்ற தீர்மான எண்.4 நாள்.31.01.2018 அன்று அனுமதி பெறப்பட்டு கீழ்கண்ட பணிக்கு 08.02.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** வார்டு எண் 11 முதல் 21 வரை உள்ள குடிநீர் குழாய்களை பழுது நீக்கம். (கூலி ஒப்பந்தம் மட்டும் பொருட்கள் உள்பட ) செய்யும் பணி<br>மேலும் வார்டு எண் 1 முதல் 21 வரை அனைத்து பகுதிகளிலும் உள்ள மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணி ( கூலி ஒப்பந்தம் மட்டும்) | 10.00 | திருமதி.ராதா | **0.29%** குறைவு |
| | | | திரு.லிங்கதுரை | 0.15% குறைவு |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.29% குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திருமதி.ராதா அவர்களின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு—**

அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் :25/2018/இ1)

பொருள்:20

திருத்தங்கல் நகராட்சி 2018-2019-ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் வருடாந்திர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றத்தில் நிர்வாக அனுமதி பெற தனி அலுவலர்/ ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 1 முதல் 10 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 |
| 2 | வார்டு எண் 11 முதல் 21 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட)பணி | 10.00 |
| 3 | வார்டு எண் 1 முதல் 10 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம்) பணி | 10.00 |
| 4 | வார்டு எண் 11 முதல் 21 வரை உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம் ) பணி | 10.00 |
| 5 | வார்டு எண் 1 முதல் 21 வரை உள்ள மின் தெரு விளக்குகளை பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம் - கூலி ஒப்பந்தம் மட்டும்) பணி | 5.50 |
| 6 | திருத்தங்கல் நகராட்சி குளோரின் சிலிண்டர் சப்ளை செய்யும் பணி | 6.00 |
| 7 | வார்டு எண் 1 முதல் 21 வரை உள்ள அடிகுழாய்கள் பழுது பார்க்கும் (வருடாந்திர ஒப்பந்தம் கூலி ஒப்பந்தம் மட்டும்) பணி | 4.00 |
| 8 | திருத்தங்கல் நகராட்சி பகுதியில் தற்சமயம் 13 எண்ணம் உயர்மின் கோபுர விளக்குகள் இயக்கப்பட்டு வருகின்றது. அவற்றிக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் (வருடாந்திர ஒப்பந்தம் மற்றும் பொருள்கள் உள்பட) பணி | 4.00 |
| 9 | திருத்தங்கல் நகராட்சி பகுதியில் வார்டு எண். 01 முதல் 21 வரை உள்ள மின் தெருவிளக்குகள் வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்கு தேவையான உபரி சமான்கள் தி காரனேசன் கூட்டுறவு பண்டக சாலை என்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்யும் பணி | 10.00 |

மேற்படி பணிகளை பொதுநிதித் திட்டம் 2018-2019-ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். 351/2018/இ1

பொருள்:21

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.03 பெரியார் காலனி விரிவாக்கப் பகுதியில் தற்பொழுது குடியிருப்புகள் அதிகரித்துள்ளப்படியால் அங்கு உள்ள மக்களுக்கு சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே அப்பகுதியில் கூடுதலாக குடிநீர் குழாய்கள் பதித்து அப்பகுதி மக்களுக்கு சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/- (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 361/2018/இ1

**பொருள் எண்:22**

திருத்தங்கல் நகராட்சி குடிநீர் விநியோகம் - குடிநீர் விநியோக மண்டலங்கள் (Zonation) தொடர்பான Auto Cad வரைப்படம் மற்றும் இதர பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50000/-(ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 364/2018/இ1)

**பொருள் எண்: 23**

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 05 முருகன் காலனியில் சின்டெக்ஸ் டேங்குகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது அங்குள்ள சின்டெக்ஸ் டேங்குகளில் இரண்டு சின்டெக்ஸ் டேங்குகள் மட்டும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை உள்ளது. மேலும் வார்டு எண்.05 முருகன் காலனி பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் நீரின் அளவு மிகவும் குறைந்து விட்ட படியாலும் ஆழ்துளை கிணறு தூர்ந்து போய் விட்ட படியாலும் தொடர்ந்து அதனை பயன்டுத்த முடியாத நிலை உள்ளது. தற்போது கோடைக் காலம் தொடங்க உள்ளதால் அப்பகுதி மக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி முருகன் காலனி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் பழுதடைந்த சின்டெக்ஸ் டேங்குகளை மாற்றி அமைக்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,50,000/-க்கு (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 365/2018/இ1)

**பொருள் எண்: 24**

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.04 முத்துமாரியம்மன் காலனி அங்கன் வாடி மையம் அருகில் உள்ள திறந்த வெளி கிணறு மற்றும் வார்டு எண்.05 முருகன் காலனி ஜி.எல்.ஆர் டேங்க் அருகில் உள்ள திறந்த வெளி கிணறுகள் பாதுகாப்பற்ற சூழ்நிலையிலும் பொதுமக்களுக்கு அச்சுருத்தல் ஏற்படக் கூடிய வகையிலும் உள்ளன. மேற்படி வார்டு எண்.04 அங்கன்வாடி மையம் அருகிலுள்ள திறந்த வெளி கிணற்றினால் அங்கன்வாடி பயிலும் குழந்தைகளுக்கு அச்சுருத்தலாக உள்ளது. எனவே பொதுமக்களுக்கு இடையூராக உள்ள இவ்விரு திறந்த வெளி கிணறுகளை சுற்றி சுற்று சுவர் அமைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3,50,000/-க்கு ( மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 369/ 2018/இ1

**பொருள் எண்: 25**

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண் 01 முதல் 21 வரை பல்வேறு பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு மோட்டார்கள் பொருத்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகர் பகுதிகளில் மூன்று இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்ட மின் மோட்டார்களில் ஏற்பட்ட பழுதுகளின் காரணமாக அவற்றை மேலே தூக்கி பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, ஆனாலும் மின் மோட்டார்களை மேலே தூக்க இயலாத நிலை ஏற்ப்பட்டுள்ளது. மோட்டார்கள் பழுதின் காரணமாக அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய ஏற்படும் சிரமத்தை தவிற்க அம் மின்மோட்டார்களை சிறப்பு கருவி மூலம் மேலே தூக்கி பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.75,000/-க்கு (எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 372/ 2018/இ1

**பொருள் எண்: 26**

திருத்தங்கல் நகராட்சி - தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2017-18-ன் கீழ் இரண்டு சிப்பம் சாலைப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி நாள் 15.09.2017 அன்று தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களை தேர்வு செய்யும் பொருட்டு மேற்கண்ட பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழ்களில் வெளியிட வேண்டி Accord Advertising என்ற விளம்பர நிறுவனத்தின் மூலம் நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டதற்கான பட்டியல் அந்நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. (எண். AAA/0541/17-18 நாள்.15.08.2017) மேற்படி பட்டியல் தொகை ரூ.1,33,560/- மட்டும் Accord Advertising Agencies நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1559/2017/இ1)

**பொருள் எண்: 27**

திருத்தங்கல் நகராட்சி - சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் 2017-18 ( MLA FUND ) -ன் கீழ் வார்டு எண்.05ல் சமுதாயக் கூடம் அமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 22.12.2017 - அன்று நடைபெற உள்ள ஒப்பந்தப்புள்ளியில் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களை தேர்வு செய்யும் பொருட்டு மேற்கண்ட பணிக்குரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு Accord Advertising Agencies என்ற நிறுவனம் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டதற்கான பட்டியல் அந்நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. (எண் AAA/0900/17-18 நாள்.11.12.2017) மேற்படி பட்டியல் தொகை ரூ.12096/- மட்டும் Accord Advertising Agencies-க்கு நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2461/2017/இ1)

**பொருள் எண்: 28**

திருத்தங்கல் நகராட்சி - தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2017-18-ன் கீழ் (Phase II) பகுதி இரண்டின் கீழ் இரண்டு சிப்பம் சாலைப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி நாள் 08.12.2017 அன்று தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களை தேர்வு செய்யும் பொருட்டு மேற்காண் பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழ்களில் வெளியிட வேண்டி Accord Advertising என்ற விளம்பர நிறுவனத்தின் மூலம் நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டதற்கான பட்டியல் அந்நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. (எண். AAA/0830/17-18 நாள்.23.11.2017) மேற்படி பட்டியல் தொகை ரூ.86940/- மட்டும் Accord Advertising Agencies நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2283/2017/இ1)

**பொருள் எண்: 29**

இந்நகராட்சிக்கு தேவையான் 15 எண்ணம் டம்பர் பிளேசர் பின் பழுதாகி குப்பைகள் சிதறுவதால் உபயேகபடுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் சில இடங்களில் குப்பை தொட்டி (டம்பர் பின்) இல்லை என்பதால் குப்பைகள் ரோட்டில் சிதறி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 15 எண்ணம் புதிய டம்பர் பின் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு ( ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

சுகாதார நலன் கருதி பொது நிதி அல்லது திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 379/2018/சி1)

**பொருள் எண்: 30**

திருத்தங்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனங்கள் இயங்குவதை கண்காணிக்க முதல் கட்டமாக TN67 L3065, TN67 L3267, TN67 AP0829 வாகனத்தில் Advance GPS Tracker பொருத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.573/2018/H1

**பொருள் எண்: 31**

திருத்தங்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN67 L3265, TN67 L3267, TN67 AP0829 வாகனங்கள் இயங்குவதை கண்காணிக்க Advance GPS Tracker பொருத்த விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1)Concox GPS, Chennai-26 = Rs.7200/No's

2)Aurfly Software Chennai-16 = Rs. 7400/No's

3) Moobrack GPS System Chennai-15 = Rs.5550/No's

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்கண்ட விலைபுள்ளிகளில் M/s Moobrack GPS System Chennai-15 கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.573/2018/H1

**பொருள் எண்: 32**

திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் துப்புரவு பணியான குப்பை வாங்குதல், குப்பை அகற்றுதல் வாறுகால் சுத்தம் செய்தல் போன்ற பணிகளை கீழ்கண்ட மகளிர் சுய உதவி குழுக்கள் செய்து வருகின்றனர்.

1) SKMS அக்ஷயா மகளிர் மன்றம் (17நபர்கள்)
2) புன்னகை மகளிர் மன்றம் (17 நபர்கள்)
3) அமுத சுரபி மகளிர் மன்றம் (17 நபர்கள்)

மேற்கண்ட மகளிர் சுய உதவி குழுக்கள் பணி காலம் 31.03.2018-ல் முடிவடைய உள்ளதால், மேலும் ஓராண்டு காலம் 01.04.2018 முதல் 31.03.2019 வரை ( ஏப்ரல்-18 முதல் மார்ச்-19) நீட்டிப்பு செய்ய மேற்கண்ட மகளிர் சுய உதவி குழுக்கள் விண்ணப்பம் அளித்துள்ளனர். எனவே பணியாளர் பற்றாக்குறை, பொது சுகாதார பணியின் அவசியம் கருதி மேற்கண்ட, துப்புரவு பணியினை மகளிர் சுய உதவி குழுவின் மூலம் மேலும் ஓராண்டு காலம் (01.04.2018 முதல் 31.03.2019 வரை) கால நீட்டிப்பு செய்யவும் மேற்படி மகளிர் குழுவிற்கான ஊதியத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் விருதுநகர் அவர்களின் 2016-2017-ம் ஆண்டு தினக்கூலி விலை நிர்ணய பட்டியல் கடிதம் ந.க.எண்.A7/13699/2016 நாள்.29.07.2016 பட்டியல் வரிசை எண்.34-ல் கூறியுள்ள படி நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ.173/- வழங்கவும், அதற்காக ஓராண்டு காலம் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூபாய் 30,00,000/- லட்சத்திற்கு (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பொது சுகாதார பணியின் அத்தியவாசிய தேவையினை கருத்தில் கொண்டு மேற்படி துப்புரவு பணியாளர் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.498/2018/H1

**ஆணையாளர்/ தனிஅலுவலர்**
**திருத்தங்கல் நகராட்சி**